# அறிவித்தல்

## இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் 2019(2020)

2025.10.27 ஆம் திகதியுடையதாக அமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்பட்ட, இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் - 2019(2020) இற்கான ஒவ்வொரு பாடத்தின் கீழும் பொது நேர்முகப் பரீட்சையின்படி தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களின் பெயர்ப்பட்டியலுக்கு அமைவாக, தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை நடைபெறும் திகதிகள் மற்றும் குறித்த நேரங்கள் குறிப்பிடப்பட்ட அழைப்புக் கடிதங்கள், விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப் படிவங்களில் குறிப்பிட்டுள்ள முகவரிகளுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அழைப்புக் கடிதத்தின் மாதிரி வடிவம் மற்றும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதிகள், நேரங்கள் குறிப்பிடப்பட்ட ஆவணமும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது)

குறித்த திகதிகளில் மற்றும் நேரங்களில், அழைப்புக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக அனைத்து ஆவணங்களையும் தயார் செய்து நேர்முகப் பரீட்சை சபைக்கு சமூகமளிக்க வேண்டும். (தமக்குரிய திகதி மற்றும் குறித்த நேரத்தில் சமூகமளிப்பது கட்டாயமாகும்.)

அன்றைய தினம் அழைப்புக் கடிதத்தின் 3 ஆம் தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களின் மூலப் பிரதிகள் உள்ளடங்கிய கோவை ஒன்றையும், அந்த ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட நகல் பிரதிகள் உள்ளடங்கிய அதற்கு இணையான வேறொரு கோவையையும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள நேர்முகப் பரீட்சை இலக்கம் மற்றும் சபை இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பிக்க வேண்டும். (கோவையின் மேற்பக்கம் தயாரிக்கப்பட வேண்டிய விதம் குறித்த மாதிரி வடிவம் ஒன்றும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது). அனைத்து சான்றிதழ்/ஆவணப் பிரதிகளும் அவை 'உண்மையான பிரதிகள்' என உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.